**18-12-2011**

*வருகையின் நான்காவது ஞாயிறு*

# அக்களிப்போம் ஆண்டவர் அருகில்

## REJOICE THE LORD IS NEAR

செக். 2:10-13 பிலி. 4:4-9

திபா. 50:1-15 லூக். 1:46-56

*"மகளே சீயோன் ! அகமகிழ்ந்து ஆர்ப்பரி; இதோ நான் வருகிறேன்; வந்து உன் நடுவில் குடிகொள்வேன் என்கிறார் ஆண்டவர்" செக். 2:10*

***மன்றாட்டு :*** *எங்களை தேற்றி ஆற்றல்படுத்தும் கடவுளே, இரவு சென்றுவிட்டது பகல் அருகில் வந்துவிட்டது என்பதை கற்றுத் தந்து, விழித்தெழுந்து இறையரசின் சான்றுகளாக எங்களைத் தூண்டியிருக்கிறீர். பற்றுமையில் எங்களை பலப்படுத்தி எங்கள் நம்பிக்கையை புதுப்பித்தருளுவதன் வாயிலாய் கிறிஸ்துவின் வருகையினை அகமகிழ்வுடன் எதிர்கொள்ள துணைசெய்ய இயேசுகிறிஸ்து வழி வேண்டிக்கொள்கிறோம்.*

*- ஆமென்.*

முழுமையான அக்களிப்பைத் தேடுகின்ற உலக வாழ்வில் மனிதர்கள் குறைவுடைய அக்களிப்பையே வாழ்வில் பெறுகின்றார்கள். காரணம் கடவுள் இல்லாத உலக வாழ்வில் வரும் அக்களிப்பு குறைவுடையதாகவே அமைந்திடும். இஸ்ரவேல் மக்கள் மேசியாவில் வரும் அக்களிப்பை உலக பார்வையில் தேடினார்கள். அரசனால் அக்களிப்பு வரும் என்று அதிகமாக நம்பினார்கள். இவைகளால் வந்த அக்களிப்புகள் நிரந்தரமில்லாதவையாகவும் அழுகுரலாகவும் மாறியது. சகரியா தீர்க்கர் மேசியாவால் வரும் நிரந்தரமான ஆன்மீக அக்களிப்பை கூறுகின்றார்.

### 1. *உடன் வாசம் பண்ண அருகில்* (செக். 2:10)

மேசியா அரண்மனையில் வருவார் என்ற எதிர்பார்ப்பு இஸ்ரவேலரிடம் அதிகம் இருந்ததால் ஒவ்வொரு அரசனது அபிஷேகத்திலும் மேசியா ஆளுகையை எதிர்பார்த்தனர். சகரியா தீர்க்கர் மேசியா அரண்மனையில் அல்ல மனிதனோடு உடன் வாழ அருகாமையில் வந்துவிட்டார் என்று கூறி அரண்மனையிலிருந்து வரும் அக்களிப்பு அல்ல உள்ளங்களிலிருந்து புறப்படும் அக்களிப்பை கூறினார். ஆண்டவர் உடன் வாசம் பண்ண எப்படி வருகின்றார். முதலாவது கிறிஸ்து எனும் மானிட வடிவில் இரண்டாவது, தீர்ப்பு அருளும் வருகையின் மூலம் உடன் வாசம் பண்ணுவார். இந்த இரண்டு வகைக்கும் ஆயத்தங்கள் தேவை. ஆண்டவர் வாசம் பண்ணவரும் இடம் எப்படி ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். தலைவர்கள் வருகைக்கு வரவேற்பு ஆயத்தங்கள் தேவை. மேசியா வரும்போது வரவேற்பு ஆயத்தம் அல்ல வாழ்வின் ஆயத்தமே தேவை.

சகேயுவை தேடிவந்த போது உள்ளம் மாற்றமடைந்தது (லூக். 19:5,8) சகரியா இத்தகு மாற்றத்தை, உடன் வாசம் பண்ணும் கடவுளால் தீமைகள் அகலும் என்கிறார் (3:14,15).

கடவுள் ஆலயத்தில் வாசம் பண்ணுபவர் என்ற அசையா ஆன்மீகம் இஸ்ரவேலரிடம் உண்டு. ஆலய அழிவால் இந்த நம்பிக்கையும் மாற்றமடைந்து மக்களுடன் வாசம் பண்ணும் ஆண்டவராக சகரியா விளக்குகின்றார் மறைந்த உருவில் உடன் இருந்த கடவுள் மானிட உருவில் உடன் வாழ அருகிலிருப்பதால் வரவேற்பு ஆயத்தங்களை விட்டுவிட்டு வாழ்வின் ஆயத்தங்களால் சந்தித்தால் அக்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

**2. *உறவின் வாழ்வு தர அருகில்*** (செ. 2:11)

''வேற்றினத்தார் பலர் ஆண்டவரிடம் வந்து சேர்வார்கள் அவர்கள் அவருடைய மக்களாய் இருப்பார்கள் அவர் உன் நடுவில் தங்கியிருப்பார்''

இறை உறவில் வரும் இழப்புகளே மனித உறவுகளின் உடைவுகளுக்கு அடித்தளம். உடைவுபடும் உறவுகளால் அக்களிப்பு அகன்று அழுகை ஆரம்பமாகின்றது. ஒன்றாயிருந்த இஸ்ரவேல் நாடு இறை உறவின் சீர்குலைவுகளால் இரண்டாக உடைவுபட்டது. உடைவுபட்ட யூதா, இஸ்ரவேலும் உருவிழந்து அழிந்து போன காலச்சூழல் சகரியாவின் காலம். இரண்டு பிரிந்த நாடுகளும் இல்லாச் சூழலில் இணைந்த உறவு கடவுள் வாசம் பண்ண வரும்போது உருவாவதாக குறிப்பிடுகின்றார். பல நாடுகள் ஒன்றாகும், பல இனங்கள் ஒன்றாகும். பல குழுக்கள் ஒன்றாகும், யூதர் கிரேக்கர் ஒன்றாவார்கள். உலக நாடு உலகம் சார்ந்த ஆசிகளால் ஆற்றல், அதிகாரம், யுத்தம் போன்ற காரியங்களால் வருகின்ற அக்களிப்பை தேடுகின்றது. திருமறை இறைவனது பாதைக்கு திருப்பப்படுவதால் வரும் அக்களிப்பை கூறுகின்றது. (ஏசாயா 2:3) உலக எல்கையிலிருந்து உறவுக்குள் திரும்புவார்கள் கடவுள் அவர்களை நடத்துவார் (எரே. 31:8,9). பல பட்டணங்கள் இணையும் (செக். 8:20) தூர உறவு இசைகின்ற போது யுத்த எண்ணம், கொலை எண்ணம் உழைப்பின் எண்ணமாக மாறும் யுத்தமில்லா புது உறவு உருவாகும் (மீக். 4:1-3)

சகரியா சொல்லும் அக்களிப்பு கிறிஸ்துவின் பிரசன்னத்தால், பல இன மக்களின் இசைவினால், வருகின்ற அக்களிப்பு ஆகும். இசைவுடன் கூடிய உறவு முழுமையான மன மாறுதலின் அனுபவத்தால் வரும் தனித்தனியாக வரும் மனம் மாறுதல் மட்டுமல்ல முழு தேசமும் மாறும் மாற்றம் ஆகும். நினிவே அரசன் முதல் மக்கள் வரை முழுமையான மாற்றம் வந்தது போல (யோனா. 3:5) எருசலேம் முதல் அனைவருக்கும் வரும் மாற்றம் (மீக். 24:47). இந்த மனம் மாறுதலால் வரும் புது உறவுக்கு ஆண்டவர் இயேசுவே தலைமை ஏற்பதால் முழுமையான அக்களிப்பு பெறலாம்.

### 3. *உண்மை வாழ்வுக்கு வழிகாட்ட அருகில்* (செக். 8:3)

''எருசலேம் நடுவில் குடியிருக்கப் போகிறேன் எருசலேம்
உண்மையுள்ள நகர் என்றும் ... பெயர் பெற்று விளங்கும்''

கடவுள் வாசம்பண்ண வரும்போது மனித வாழ்வு மட்டுமல்ல நாடு முழுமையும் உண்மைக்கு சான்றாக மாறும். எருசலேம் உண்மையுள்ள நகர் என்ற புதுப்பெயரால் அழைக்கப்படும். மீட்பு சந்திக்கும்போது புதுப்பெயர் சூட்டப்படும். ஏசாயா மீட்பின் அனுபவத்தில் பரிசுத்த ஜனம், தேடிக்கொள்ளப்பட்டவன், கைவிடப்படாத நகரம் என்ற பெயர் கொடுக்கிறார் (62:12) எசேக்கியேல் தீர்க்கர் மீட்பின் அனுபவத்தை கடவுள் இங்கிருக்கிறார் என்ற பொருளுடன் 'யெகோவா ஷம்மா' என்று பெயர் கொடுக்கிறார் (48:35) சகரியா மக்களும் நாடும் உண்மை வாழ்வுக்கு திரும்பு (8:8) என்கிறார்.

இறை நம்பிக்கையும் நல்வாழ்வும் இணைந்து செல்வதே உண்மை வாழ்வு. இந்த உண்மை வாழ்வுக்கு கடவுளின் உடனிருப்பால் வழிகாட்டப்படுகின்றது. இவ்வழிகாட்டலால் உள்ளத்தின் பொல்லாத எண்ணம் அகலும் (எபே. 3:17) பவுல் கூறும்போது உண்மை, கண்ணியம், நேர்மை, தூய்மை, விரும்பத்தக்கவை, பாராட்டுதற்குரியவை, நற்பண்புகளை மனதில்கொள்ளும்போது கடவுள் தரும் அக்களிப்பை பெற முடியும் (பிலி. 4:4,8) என்கிறார். உண்மையை தேடுவது மட்டுமல்ல கடைபிடிக்க வேண்டும். செல்வம் நிறைந்த வாலிபன் உண்மையை தேடினான். வழிகாட்டப்பட்டபோது கடைபிடிக்க முடியவில்லை (மத். 19:22) மேசியாவின் உண்மை வழிகாட்டுதலை பின்பற்றுகிறவர் புதுவாழ்வில் நுழைந்திடுவர் (ஏசாயா 26:2) உண்மை வாழ்வுக்கு அடையாளமாக பரிசுத்தம் என்ற முகவரியை பெறுவர். (செக். 14:20)

கடவுள் உடன் வாசம் பண்ண உறவின் வாழ்வு தர உண்மை வாழ்வுக்கு வழிகாட்ட அருகில் இருப்பதால் அக்களிப்போம்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

**21-12-2011** — ***மார் தோமா திருச்சபை நாள்***

| | |
|---|---|
| ஏசா. 22:2-24 | பிலி. 3:12-21 |
| திபா. 100 | யோவா. 14:1-14 |